இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது. பதிவு இல: QB/3529 —விலை சதம் 10.

# விடுதலை

''நாட்டும் சீர்த்தமிழன்
இந்த நானில மாயங்கண்டு
காட்டிய வழியிற் சென்று
கதிபெற வேண்டுமென்றே
ஆட்டும் சுட்டுவிரல் கண்டு
ஆடிற்று வையமென்று
கேட்டுநான் இன்ப ஊற்றுக்
கேணியிற் குளிப்பதென்னுள்''

—பாரதிதாசன்

''என்று தணியும் இந்த சுதந்திர தாகம்; என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்''

முரசு 5 | திருவள்ளுவர் ஆண்டு 2001 மார்கழி 17 (1—1—71) வெள்ளிக்கிழமை | முழக்கம் 74

## சிங்கள சோஷலிசத்தில் வேலை வாய்ப்பு!

# 767 சிங்களவர் - 23 தமிழர்!!

சமீபத்தில் அரசாங்க எழுதுநர் மற்றும் ஒத்த சேவைகளுக்கு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளோர் விபரம் 1970 - 12 - 4ம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்துள்ளது.

1968 ஜூ23ல் நடைபெற்ற சிறு ஊழியர் பதவி உயர்வுக்கான விசேட பரீட்சையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர்களின் மொத்த எண்ணிக்கை 793. இவர்களில் சிங்களவர் 767 பேர், தமிழர் 23 பேர், முஸ்லீம்கள் மூவர்!!!

ஒவ்வொரு சேவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்போரை இனவாரியாக பகுத்துப் பார்த்துக் கண்ட விபரம் வருமாறு:—

(1) பொது எழுதுநர் சேவை

| மொத்தம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் |
|---|---|---|---|
| 463 | 448 | 12 | 3 |

(2) அஞ்சல் எழுதுநர் சேவை

| மொத்தம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் |
|---|---|---|---|
| 109 | 105 | 4 | — |

(3) புகையிரத எழுதுநர் சேவை

| மொத்தம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் |
|---|---|---|---|
| 38 | 38 | — | — |

(4) ஆசுபத்திரி எழுதுநர் சேவை

| மொத்தம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் |
|---|---|---|---|
| 13 | 13 | — | — |

(5) தட்டச்சாளர்

| மொத்தம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் |
|---|---|---|---|
| 62 | 59 | 3 | — |

(6) பண்டசாலை உதவிப் பொறுப்பாளர் சேவை

| மொத்தம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் |
|---|---|---|---|
| 108 | 104 | 4 | — |

மேலே குறிப்பிட்டுள்ள பல சேவைகளிலுமாக தெரிவு செய்யப்பட்டுள்ள மொத்த ஆட்களின் இனரீதியான விபரம் இதோ:—

| மொத்தம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம்கள் |
|---|---|---|---|
| 793 | 767 | 23 | 3 |

மேலே தரப்பட்டுள்ள அரசாங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்கள் சிங்கள சோஷலிசத்தின் கீழ் தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய தொழில் வாய்ப்பு (?) எப்படியிருக்கும் என்பதை தெளிவாகக்காட்டுகிறது.

சிங்களம் படித்தால் தமிழர்களுக்கு தொழில் கிடைக்குமென்று நம்மிடையே ஒரு கும்பல் பேசித்திரிகிறது!

(சிங்கள) சோஷலிச ஆட்சியிலே சுரண்டல் ஒழிக்கப்பட்டு – இனவேற்றுமை களையப்பட்டு – சகலருக்கும் அவரவர் உரிமை வழங்கப்படும். தமிழர்களுக்கும் தங்கள் பங்கு கிடைக்கும் எனவே தமிழர்கள் (சிங்கள) சோஷலிச ஆட்சிக்கு அடிவருடவேண்டுமென புதிதாக ஒரு கும்பல் பிரசாரம் செய்து திரிகிறது!

வடகிழக்கு மாகாணங்களில் என்ன இருக்கிறது. தொழில் பார்க்க தென்னிலங்கை தேவையென மேலும் ஒரு கும்பல் அவலக்குரல் எழுப்புகிறது!

மொத்தமாக இக்குரல்கள் யாவும் வடிகட்டின சுயநலக் கூக்குரல்களே! இந்த சுயநலக் கும்பலின் கூற்றுக்கும் உண்மைக்கும் சம்பந்தமில்லை என்பதை அரசாங்க புள்ளி விபரமே விளக்குகிறது. ஆகவே சுயநலமிகளின் ஏமாற்றுப் பேச்சினால் பொது மக்களை எந்நாளும் ஏமாற்ற முடியாது.

ஈழமும் தமிழர்களும் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப்பட்டு – கட்டுப்பட்டு வாழும் வரை நம் வாழ்வு பாலைவனமாகவே இருக்கும் என்பதற்கு இப்பொழுது வெளியாகியுள்ள விபரங்கள் மேலும் ஒரு சான்று!

## சிங்கள ஏகாதிபத்திய பிடி வலுக்கிறது! கோணேசர் மலை 'ராஜசிங்க கொட்டுவ' வாக மாறுகிறது!!

வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே சைவமும் தமிழும் தழைத்தோங்கிய புனித நகர் திருகோணமலையில் சிங்கள ஏகாதிபத்திய பிடி வலுக்கிறது.

தென்கயிலை என சைவத்தமிழர்களால் போற்றப்பட்டும், சைவசமயக்குரவர்களுள் ஒருவரான திருஞான சம்பந்தரால் 7ம் நூற்றூண்டில் தேவாரப்பாமாலை சூட்டப்பட்டதுமான கோணை நாதர் மாதுமை சமேதராய் எழுந்தருளியுள்ள—புனித பதியாம்—கோணேசர் மலைப்பகுதிக்கு சிங்கள ஏகாதிபத்திய அரசு 'ராஜசிங்க கொட்டுவ' எனப் பெயரிட முடிவு செய்துள்ளது.

பண்டு தொட்டு சைவ திருத்தலமாக இருந்த கோணேசர் கோயிலை போர்த்துக்கேயர் கைப்பற்றி இடித்துத் தரைமட்டமாக்கி தாங்கள் ஒரு கோட்டையைக் கட்டினர். தொடர்ந்து வந்த டச், வெள்ளைக்கார ஏகாதிபத்திய ஆட்சிகளின் கீழும் கோணேசர் மலை இராணுவ கோட்டையாகவே மிளிர்ந்தது.

கோணேசர் மலைப் பகுதியை சைவ மக்களின் புனித இடமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கையை நிராகரித்த சிங்கள அரசு 16ம் நூற்றூண்டில் போத்துக்கேயரினால் கட்டப்பட்ட கோட்டைக்கு கண்டியில் ஆட்சி செய்த அரசனின் பெயரைச் சூட்ட முடிவு செய்துள்ளது – திருகோணமலை பழைய கண்டிய இராச்சியத்தின் ஒரு பகுதி என உரிமை கொண்டாடவே.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தளவில் வெளிநாட்டு வெள்ளையர் ஏகாதிபத்தியத்துக்கும் உள்நாட்டுக் கொள்ளையர் ஏகாதிபத்தியத்துக்கும் உள்ள வேற்றுமை என்ன?

## பல்கலைக்கழக மோசடி!

# மாணவ சமுதாயம் எழுப்பும் கேள்வி!!

கடைசியிலே உண்மையைக் கக்கி விட்டார் உத்தமராம் கல்வி அமைச்சர். பல்கலைக்கழகப் புகுமுக முடிவுகளில் கல்வி அமைச்சரின் தில்லு முல்லுகளை அவரது சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையே அம்பலப்படுத்துகிறது' ஆயினும் தமிழ் 'தேசிய' தினசரிகள் உண்மையை மறைத்தும், சிந்தனைத் தெளிவற்றவர்களின் அறிக்கைகளை வெளியிட்டும் தம்மைத் தாழ்த்திவிட்டன.

அமைச்சரின் அறிக்கை தரும் புள்ளி விபரங்கள் கூறும் கதை இதோ:—

| பல்கலைக் கழகத் துறை | பல்கலைக்கழகம் புகுவதற்கு சிங்கள மாணவன் பெறவேண்டிய கூட்டுத்தொகை | தமிழ் மாணவன் பெறவேண்டிய கூட்டுத்தொகை |
|---|---|---|
| 1. பொறியியல்— | | |
| பேராதனை- | 227 | 250 |
| கட்டுப்பெத்தை | 212 | 232 |
| 2. மருத்துவம் | 229 | 250 |
| 3. பல் வைத்தியம் / மிருக வைத்தியம் / இயற்கைவிஞ்ஞானம் | 175 | 181 |
| 4. பௌதீக விஞ்ஞானம் | 183 | 204 |
| 5. கட்டடக் கலை | 180 | 194 |

இன அடிப்படையில் தெரிவுகள் நடந்துள்ளன என்பது தெளிவாகி விட்டது. இதனை ஆட்சேபித்து யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் மாணவரின் ஆட்சேபனைக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடந்துள்ளன.

இது பற்றி மாணவ தலைவர்கள் வட்டாரத்தில் அவர்களின் அடுத்த நடவடிக்கை பற்றி அவர்கள் மௌனம் சாதித்தனர்: ஆனுல் சில கருத்துக்களை அவர்கள் தெரிவிக்கத் தயங்கவில்லை.

''அமைச்சரின் அறிக்கையில், தமிழ் மாணவருக்குச் செய்யப்பட்ட அநீதிகளை மூடி மறைக்க, மக்களின் கவனத்தை திசை திருப்பும் முயற்சியைக் காண முடிகிறது. முக்கியமாக முஸ்லிம் மாணவருக்குத்தான் சலுகைகள் வழங்கப்பட்டதாகவும் அதனை நாம் கண்டித்ததாகவும் அதற்கான மறுமொழி பிரமாதப் படுத்தப் பட்டுள்ளது. இது படு பொய். எமது முழுக்குற்றச்சாட்டும் ஆழுமினத்திற்குச் சலுகைகள் வழங்கப் பட்டதென்பதுதான் - பின்தங்கிய தமிழ்ப் பகுதிகளுக்கோ, முஸ்லீம் மாணவருக்கோ வழங்கப்பட்டதைப்பற்றியல்ல, (அப்படி எதுவும் வழங்கப்பட்டதாகவும் தெரியவில்லை.)

இன்னொரு விஷயம், கல்வி அமைச்சரின் கொடும்பாவி எரித்ததைப்பற்றியும் சில சிறிலங்கா கட்சி முஸ்லிம்கள் பிரமாதப்படுத்துகிறுர்கள், ஒரு முஸ்லிம் தலைவரின் கொடும்பாவியை எரித்ததாக. இது எம் மீது சுமத்தப்படும் வீண்பழி. நாம் எரித்த கொடும்பாவி ஒரு முஸ்லிம் தலைவரினதல்ல, ஒரு உருவமற்ற கல்வி அமைச்சரினது தான். ஒரு தமிழரோ அல்லது சிங்களவரோ கல்வி அமைச்சராயிருந்தாலும் இதே பாணியில்தான் செய்திருப்போம்.

இந்த இரு விடயங்களிலும் 'தினபதி' குட்டையைக் கிளறி இரு சமுகங்களுக்கு மிடையே தேவையற்ற மனக்கசப்பை ஏற்படுத்த முனையும் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பது அருவருக்கத் தக்கது.

கடைசியாக முக்கிய விசயம். இந்தத் தரப்படுத்தல் என்னும் மோசடி சரியான முறையில் அம்பலப் படுத்தப்படவில்லை. பாராளுமன்றம் தான் இதற்கான மேடை. ஒத்திவைப்புப் பிரேரணை மீது ஒருகேள்வி கேட்டு (அதுவும் செனற்சபை) அமைச்சர் ஒருவர் மழுப்புப் பதில் தெரிவிப்பதால் இந்த விஷயம் முடியாது. கல்வி அமைச்சரின் கட்டளைக்கிணங்கச் செய்யப்பட்ட தரப்படுத்தல் என்னும் மோசடியின் கெடுதிகளை நிவர்த்தி செய்ய கூட்டணி அரசாங்கம் முன்வராததால் அமைச்சரின் செய்கை அரசாங்கத்தின் செய்கையாகிறது.

இந்நிலையில் தமிழுக்காகவும் தமிழினத்துக்காகவும் போராடுவதே தமது கடமை எனக் கூறும் தமிழரசுக்கட்சி அரசாங் சாங்கத்திற்கெதிராக ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக்

(4ம் பக்கம் பார்க்க)

சேரன் முடங்கல்:

# தமிழரசுத் தலைவர்கள் தலைமறைவாகி விட்டனர்!

## வெட்கம்! துக்கம்!! வேதனை!!!

அன்பு நண்ப!

நலம் வேண்டுகிறேன். எழுதுகோல் கையில் எடுத்துஆண்டு சில சென்று விட்டன. நேற்று மாதிரி இருக்கிறது. இருந்தும் ஈர்பன்னிரண்டு திங்கள் காலதேவனின் 'பசி'க்கு இரையாகிவிட்டன. வெளிநாடு சென்றிருந்ததைத்தான் குறிப்பிடுகிறேன். இனிமேல் ஒழுங்காகசந்திக்க முயற்சிக்கிறேன். முன்பு உனக்கு அருகில் இருந்தேன். உன்னோடு அளவளாவிவிட்டு, பிரச்சினைக்குரிய 'தசை'யை தயாரித்துக் கொண்டு பின்அதற்கு 'உயிர்' கொடுப்பதுதான் வேலை. இப்போது அப்படியல்ல. தூர இருக்கிறேன். இருப்பதுவும் ஏதோ சூனிய உலகில் இருப்பதுபோன்ற உணர்வு. என்ன இருந்தாலும் இங்கு 'சூடு', அரசியல் வெட்பம் குறைவுதான்!

ஈர்பன்னிரண்டு திங்கள்கள் வெளியிலிருந்தேன் என்று சொன்னேன் அல்லவா? இதனால் இந்தக் காலத்தில் நடந்த சம்பவங்கள், அதன் பின்னணிகள் உன்வீட்டு விடயங்கள் எனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லையென்று நீ சொல்வது என் காதில் விழுகிறது. உண்மைதான், எனது வரலாற்று அறிவில் விழுந்து விட்ட இந்த வெற்றிடத்தை நிரப்ப இரண்டு திங்கள் செலவழிக்க வேண்டி வந்துவிட்டது! முதலில் படித்தது எதுவென்று நினைக்கிருய்? நீ நம்பமாட்டாய் — விடுதலை இதழ்கள்தான்! மொத்தம் ஐம்பதிற்கும் மேற்பட்ட பழைய இதழ்கள். நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியும் வரிவரியாகப் படித்து முடித்தேன். அதற்கப்புறம்— நாளேடுகள்—தமிழும் ஆங்கிலமும் படித்தேன் என்பதைவிட படித்து ஏக்கப் பெருமூச்சுவிட்டேன் என்பதுதான் உண்மை! ஏதோ விடுதலையில் இரண்டொரு எழுச்சிப்பாடல்கள் படித்த பொழுது நெஞ்சில் அவை எழுப்பிய கோபக் கனலால், குருதி 'சூடாகி' கொதிப்பதை உணர்ந்தேன்! மற்றப்படி படித்தறிந்த புதினங்கள் எல்லாம் ஒரே சோகமயம்! நம்பிக்கெட்ட இனத்தின் தொடர்கதை!!

ஒரு விடயமட்டும் என் கண்ணுக்கும் மனதுக்கும் 'துலாம்பரமாக' தெரிந்தது-தெரிகிறது. அதுதான் தமிழினம் நம்பிய தலைவர்கள். தமிழ் அரசுத் தலைவர்கள் தலைமறைவாகிய விந்தை!

நண்பா! பொதுவாக பொதுவுடமைத் தோழர்கள் தான் தலைமறைவாகிவிடுவார்கள் அரசியல் நெருக்கடி நேரத்தில்! ஆனுல் அவர்கள் தான் இப்போது பட்டப்பகலில் பவனி வருகிருர்கள்! அதைவிட புத்தம் புதிய தலைவர்களும் இந்த ஆண்டு மத்தியில் பெய்த அரசியல் மழைக்கு முளைத்திருக்கிருர்கள்!

ஒரு 'தலை'வரின் பெயர் துரைராசாவாம்! இந்தத் 'தலை'வரை 1959ம் ஆண்டு நடந்த 'அலி' சங்க மாநாட்டில் பார்த்த ஞாபம், 1965ல் 'வாலை'ப் பிடித்தவர் இப்போது வெகு புத்திசாலித்தனத்தோடு 'தலை'யை பிடித்திருக்கிருர்! என்ன புரிகிறதா? அவரது திருவாய் மொழி தான் மேலே இருப்பது! தனது அரசியல் குத்துக் கரணத்துக்கு தோழர் 'பாஷை'யில் கொடுத்த விளக்கம் இது.

இவர் கிடக்கிருர். இன்னெரு தலைவர் யாரோ குமார சூரியராம்! ஏரிக்கரை ஏடு 'தினகரன்' தினம் அவர் புகழ்பாடுகிறது! அமைச்சர் இருக்கிற படம், படுக்கிற படம், எல்லாம் போடுகிறது. இவ்வளவிற்கும் இந்த ஆள் யாரென்பதை லண்டனிலிருந்தபொழுது 'மை'போட்டுப்பார்த்துக்கூட கண்டு பிடிக்கமுடியவில்லை! என்னுல் மட்டுமல்ல—எனது நண்பர்களாலும் கூட!! இதைப்பற்றி பின் எழுதுவேன்.

தமிழ் அரசுத் தலைவர்கள் தலைமறைவாகிவிட்டார்கள் என்று, மேலே சொன்னேன் அல்லவா? அவர்களின் இன்றைய கோலத்தைக் கண்டு துக்கப்படுவதா? வெட்கப்படுவதா? வேதனைப்படுவதா? இல்லை களிவிரக்கப்படுவதா? என்று விளங்கவில்லை.

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்று தோள்தட்டி ஆர்ப்பரித்த காலம் ஒன்று இருந்தது. இன்று?

வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க்கேற்ப
நயம்பட உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு
வெறுங்கையோடு இலங்கை
புகுந்த இராவணன் நிலையிலல்லவா இருக்கிருர்கள்!

இந்த இருண்ட பின்னணியிலும் ஒரு ஒளிக்கீற்றை கடந்த வாரம் காணமுடிந்தது. அது பற்றியும், இன்னபிற பற்றியும் அடுத்தமுறை எழுதுவேன்.

அன்பு நண்பன்
—சேரன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

### அரசியல்...

#### நன்று பாடினை "கட்டுபெத்தையான்"!

15–11–70 'விடுதலை' இதழில் எம். பீயே கண்ணுறங்கு என்று தாலாட்டுப் பாடிய "கட்டுபெத்தையான்" வாயிலே ஒரு பிடி சீனியை அள்ளிப் போடவேண்டும் என்று கை துடிக்கிறது. தமிழ் எம். பி. மாருக்குத் தாலாட்டுத் தேவைப் பட்டிருக்கவில்லைத்தான். இருந்தபோதிலும் ஏற்கனவே நித்திரை செய்து கொண்டிருந்த இந்த உறுப்பினர்களைக் 'கட்டுப்பெத்தையான்' தாலாட்டு பேருறக்கத்தில் அமிழ்த்தி விட்டது. ஆனபடியால்தான் சமீபத்திலே பாராளுமன்றத்திலே "மாணவர் விஷயம்," 'தமிழ் மொழி'உபயோகம், போன்ற பல ஜீவாதாரமான பிரச்சினைகள் பிரஸ்தாபிக்கப்பட்டபோதெல்லாம் நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈரச் சாக்கினுலே மூடிய சேவலைப் போல் வாயடைத்துப்போயிருந்தார்கள். தமது கடமையிலே கண்ணும் கருத்துமாக இருப்பவர்களானுல், தமிழ் மாணவர் சமுதாயத்திலே இம்மியளவாவது அக்கறை கொண்டவர்களாயிருந்தால், உதவிக் கல்வியமைச்சர் துடாவையின் பித்தாலாட்டத்தை எதிர்த்து, தமிழும் ஆங்கிலமும் தெரிந்தவர்களுக்குச் சிங்கள மூலத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பு மட்டுமே அனுப்புவேன் என்று தமிழ் மொழி உபயோகச் சட்டத்துக்குப் புதிய வியாக்கியானம் கொடுத்த உள்நாட்டு அமைச்சரை எதிர்த்து, பாராளுமன்றமே அல்லோலகல்லோலப்படச் செய்திருக்க வேண்டாமா? "கட்டுபெத்தையான்" தாலாட்டு வேலை செய்துதான் இருக்கிறது!

இனி ஒரு 'திருப்பள்ளியெழுச்சி' பாடுக. அப்பொழுதாவது பார்ப்போம் நமது 'தெய்வங்கள்' உறக்கம் நீத்து எழுகின்றனரா என்று.

தமிழ் மாணவர்களையும் அவர்தம் பெற்ருேரையும் உறுத்திக்கொண்டிருப்பன மூன்று கேள்விகள். சோஷலிஸம், கொமியூனிஸம் பேசும் தமிழர்களை ஒருபுறம் விட்டு விடுவோம். அவர்களிற் பெரும்பாலோர் வடிகட்டின சுயநலத்துக்காக சோஷலிஸம் பேசுபவர்கள். அது இன்றைய ஃபஷன். கைவிரல்களில் எண்ணக்கூடிய ஒரு சிலர் சோஷலிஸத்தின் உன்னத தத்துவார்த்தங்களிலே அறிவினுல் மாத்திரம் பரவசப்பட்டு, தாம் பூலோகத்திலே சிங்கள இலங்கையிலே வாழ்கிருர்கள் என்பதையும் மறந்து கனவுலகத்திலே வாழ்பவர்கள். சோவியத் ரஷ்யா, செஞ்சீனு, கியூபா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், இவையெல்லாம் தத்தம் இனப் பாதுகாப்புக்காக வடித்தெடுத்த தேசியத்தைக் கடைப்பிடிக்கிருர்களேயன்றி மனித வர்க்கத்தைச் 'சகோதரா' என்று கட்டியணைக்கவில்லை. தத்தம் இனமக்களுக்கு சோஷலிஸத்தின் சில கொள்கைகளை அமுல் நடத்துகிருர்கள். இந்தப் பாணியிலே தான் சிங்கள இலங்கை சென்று கொண்டிருக்கிறது. தமிழ் சோஷலிஸவாதிகளுக்கு என்ருே ஒருநாள் புத்தி வந்து திருந்திக்கொள்வார்கள். ஆனபடியால் இவர்களை விட்டு விடுவோம். ஆனுல் சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குகிருேம் என்று பேசித்திரியும் அரசாங்கம் இந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் கூறுவார்களா? அதைத் தான் தமிழ் மாணவர்களும் பெற்ருேர்களும் எதிர்பார்க்கிருர்கள்.

ஒன்று:—

உயர் கல்வியிலே தமிழ் மாணவர்களுக்கு சமவாய்ப்பு அளிக்கப்படுமா? அல்லது, தரமோ, தரமில்லையோ சிங்கள மாணவர்களுக்குக் கொடுத்து எஞ்சியது ஏதாவது இருந்தால்தான் தமிழ் மாணவர் எதிர்பார்க்கவேண்டுமா?

இரண்டு:—

எல்லோருக்கும் பொதுவான பரீட்சையிலே அதிகப்படியான புள்ளிகளை வாங்கி தமது திறமையை நிலைநாட்டிய மாணவர்களுக்கே உயர் கல்வி ஸ்தாபனங்களில் முதலிடம் வழங்குவது என்றமுறை அன்னியர் ஆட்சி தொடக்கம் இதுவரையில் இருந்து வந்தது. இனம், மதம், சாதி, வகுப்பு என்ருே, முற்போக்குச் சமுதாயம் பிற்போக்குச் சமுதாயம் என்ருே, வசதியுள்ளவர்கள் வசதியற்றவர்கள் என்ருே, பட்டினத்தார் நாட்டுப் புறத்தார் என்ருே, உயர் கல்வி நிலையங்களுக்கு அண்மைதூரம் என்ருே, இன்னேரன்ன அளவிடமுடியாத இதர சாட்டுக்கள் இந்த முறையிலேஇடம்பெறவில்லை. இந்த முறை கைவிடப்படுகிறதா?

மூன்று:—

கைவிடப்படுகிறதானுல், தமிழ் மாணவர்கள் உயர் கல்வி வாய்ப்புப்பெறுவதற்கு என்ன நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என்று அரசாங்கம் முன்கூட்டியே அறியத் தருவார்களா?

திருப்பள்ளியெழுச்சிபாடும் பயனுக இந்த மூன்று கேள்விகளுக்கும் விடை பெற்றுக் கொடுப்பார்களானுல் தமிழ் மாணவர்களுக்குவருங்காலத்திலாவது உதவியாக இருக்கும்.

யாழ்ப்பாண மாணவர் ஊர்வலம் சம்பந்தமாக ஷ்ரான்லி கல்லூரி மாணவ மாணவிகள் எழுதிய துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டது. அதிலே ஓர் பகுதி:

"நீதி அநீதியோடு மோதுகிறது, எது வெல்லும்? காலம் பதில் சொல்லும். எமது தலைவர்களை நம்பிப் பயனில்லை. பதவி மோகம் இனத்தை அடகு வைக்கத் தூண்டுகிறது அவர்களை. எம்மிடையே இருந்துதான் எதிர்காலத் தலைவர்கள் தோன்ற வேண்டும். இன்றைய இளைஞர்கள் எதிர்கால சமுதாயத்தின் ஏற்றமிகு தூண்கள். உளுத்துப்போன உத்திரங்கள் விலகட்டும். வயிரத் தூண்கள் இதோ தோள் தட்டிநிமிர்ந்து விட்டன. அவற்றின் முதல் எழுச்சி கோட்டை மைதானத்தில்"

இதை எழுதிய இளைஞர்கள் இருக்கும் வரையில் தமிழ் இனம் ஏங்கவேண்டிய தேவை இல்லை. இந்தக் கருத்தும் உணர்ச்சியும் இதை நிறை வேற்றும் செயற் திறனு[illegible] நீடித்து நிலைக்க வேண்டும். இவர்கள் மூலம்தான் தமிழினம் சுயாட்சி காண்பார்கள்.

## (சிங்கள) சோஷலிஸ்ட் அரசு வழங்கும் உரிமை!

"தமிழ் மக்கள் நீதிமன்றங்களில் தமது சாட்சியங்களைத் தமிழில் தெரிவிக்க உரிமையுண்டு" என்று 6–12–70ல் பாராளுமன்றத்தில் நீதி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது உதவி நீதி அமைச்சர் கூறியுள்ளார் - ஏதோ பெரிய நீதியை வழங்குவதாகக் கூறியுள்ளார். தமிழ் மக்கள் தமது சாட்சியங்களை தமிழில் கூற அநுமதிக்கப்படாவிட்டால் வேறு எந்த மொழியில்தான் அளிக்கமுடியும்- ஊமைப் பாஷையைத்தவிர.

இந்தப் பாணியில் பார்த்தால் எதிர்காலத்தில் தமது மனைவி மக்களுடன் தமிழில் பேசும் உரிமையை வழங்கி விட்டதாகப் பறைசாற்றுவார்கள் போலும்.

உதவி நீதி அமைச்சரின் கொள்கைப் பேச்சிலிருந்து ஒரு விஷயம் திட்டவட்டமாகத் தெரிகிது. அதாவது தமிழரசுக் கட்சியின் கோரிக்கை- வட—கிழக்கில் தமிழ் நீதிமன்ற மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்பது-திட்டவட்டமாக நிராகரிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

இருந்தும் தமிழுக்காகப் "போராடும்" அக்கட்சி உறுப்பினர் நிதி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டை எதிர்த்து வாக்களிக்கவில்லை! என்னே இவர்களின் "போராட்டம்!"

## தமிழ் படங்களின் இறக்குமதிக்குத் தடை? "லண்டன் முரசின்" அச்சம்!

லண்டன் முரசின் கார்த்திகை இதழ் பின்வரும் செய்தியையும் கருத்தையும் வெளியிட்டுள்ளது:—

"தரமான சிங்களப்படங்களைத் தமிழில் டப் செய்து இலங்கையிலே வெளியிட சில படத் தயாரிப்பாளர்கள் திட்டமிட்டுள்ளதாக இலங்கையில் வெளிவரும் செய்திப் பத்திரிகை தெரிவிக்கின்றது. தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் தமிழ்ப் படங்களைக் குறைப்பதென்ற அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு இணங்கவே இப்புதிய முயற்சியில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சிலர் இறங்கியுள்ளனர் என்று மேலும் செய்திப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

முதலில் தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தமிழ்ப்படங்களின் சுருள் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. இனி இறக்குமதியையே குறைக்க அரசு திட்டமிட்டுள்

[3ம் பக்கம் பார்க்கவும்]

"ஆட்டும் சுட்டுவிரல்கண்டு ஆடிற்று வையமென்று

# தமிழ் "ஸ்ரீ" க்கு எதிரான வழக்கு தள்ளுபடி !

## 'நவத்'தின் முன்மாதிரியை மானத்தமிழர் பின்பற்றலாம் !!

தமிழர் சுயாட்சி கழகத்தின் தலைவரும் காவலூர் தொகுதியின் முந்நாள் நா. உ. மான திரு. வ. நவரத்தினம் அவர்கள் காவலூர் தொகுதி மக்களினால் தமக்களிப்பு செய்யப்பட்ட காரில் சிங்கள சிறீ எழுத்துடன் தமிழ் சிறீ எழுத்தையும் போட்டே அக்காரை உபயோகித்து வந்தார் என்பது தெரிந்ததே.

கெட்டிக்காரர்களான பொலிசார் திரு. நவரத்தினம் அக்காரை ஓட்டிச் செல்லும் வேளையில் பேசாதிருந்துவிட்டு, அவரின் மகன் திரு. ராஜ்மோகன் காரை ஓட்டிச் சென்ற பொழுது மறித்து ஒரு வழக்குத்தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த யாழ்பாண நீதிபதி தமது தீர்ப்பில் திரு. ராஜ்மோகனிடம் கார் ஓட்டும் அனுமதிச் சீட்டு இருந்த பொழுதிலும் அவர் காரை ஓட்டிச் சென்ற சமயம் கார் ஓட்டும் அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு நிரூபணமானதால் அவரை எச்சரித்து விடுதலை செய்தார்.

சிங்கள சிறீ எழுத்துடன் தமிழ் ஸ்ரீ எழுத்தும் போட்டு ஓடிய குற்றச்சாட்டு பற்றி விசாரித்த நீதிபதி அவர்கள் திரு. ராஜ் மோகன் குறிப்பிட்ட எந்த சட்டத்தை மீறினுரென பொலிசார் நிலைநாட்டவில்லையாதலால் அவரை குற்றவாளியல்லவென்று தீர்ப்பளிப்பதாகவும் கூறினுர்.

சிங்கள சிறீ எழுத்துடன் தமிழ் ஸ்ரீ எழுத்தும் போட்டு கார் ஓட்டுவது எந்தச் சட்டத்தை மீறும் குற்றம் என்பது அரசினர்க்கே தெரியவில்லை. இந்நிலையில் சிங்கள ஆட்சியின்கீழ் குமுறிக்கொண்டிருக்கும் தமிழ் மக்கள் தம் வாதனையையும் வேதனையையும் விடுதலைத் துடிப்பையும் ஆளவந்தாருக்குக் காட்ட நவத்தின் முன்மாதிரியைப் பின்பற்றலாம். ஏனைய தமிழ் கட்சிகளின் தலைவர்களும் இதைச் செய்யமுன்வருவார்களா?

## வாசகர் கடிதம்:

### சந்தேகம் தீர்ந்து விட்டது !

ஐயா,

நான் ஒரு சிகையலங்கார நிலையத்தில் வேலை செய்கின்றேன். பல ஆண்டுகள் சமசமாஜியாக இருந்துவிட்டேன். நெடுங்காலமாக சமசமாஜிக்கட்சியினர் எமது உரிமைகளுக்காகப் பேசினுர்கள். அதனுல் அக் கட்சியை விரும்பினேன். சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கண்டித்தார்கள், அதற்காகப் பின் பற்றினேன். என்னைப்போன்றே எங்களில் ஏராளமானவர் ஆதரித்தார்கள். இன்று எமது உரிமைகளைப்பற்றி பேசுவதில்லை. தமிழ் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளைத் தீர்க்கப் பேசுபவர்கள் தமிழர்கள் எல்லோரையும் தாழ்த்தி வைக்கிறுர்கள்–இப்பொழுது. 19-12-70ல் நடைபெற்ற சமசமாஜ ஊர்வலத்தைப் பார்த்ததில் எனக்கு இப்படித்தான்தோன்றுகிறது. இந்த ஊர்வலத்தில் ஒரு தமிழராவது தமிழில் சுலோகங்களைச் சொல்லவில்லை. ஊர்வலத்தில் இனத்துவேசக் கூச்சல்கள் வழக்கம்போல வெளியாயின. சென்ற சில 'விடுதலை' இதழ்களைத் தற்செயலாக வாசித்ததன் பயனுக ஏற்கனவே ஏற்பட்டிருந்த சந்தேகங்கள் வலுப்பெற்றன. இவ்வூர்வலத்தால் மேலும் முற்றுக என் சந்தேகங்கள் தீர்ந்து விட்டன. இனி நாம் தமிழர்களாக வாழ வேண்டுமென்றுல் அது 'சிங்கள' சோஷலிச, சமசமாச, பொதுவுடமை மற்றும் முதலாளித்துவ கட்சிகளின் தயவால் நடைபெற முடியாது நாம் ஒரு இனமாக தனி ஒரு அரசாக மாற வேண்டும். அதற்கு உங்கள் இயக்கம் வழி நடத்தும் என்று நம்புகிறேன்.

தயவுசெய்து 'விடுதலை' சந்தா விபரங்களைப் பத்திரிகையில் வெளியிடவும் உடன் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன்.

இப்படிக்கு,
த. கிருட்டிணபிள்ளை
கொழும்பு 11
21–12–70

### "நமக்கொரு நாடு" நல்ல ஒரு முயற்சி !

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். விடுதலையில் ஆரம்பமாகியுள்ள 'நமக்கொருநாடு' தொடர், ஒரு மிக நல்ல முயற்சி. இதைத் தொடங்க முன், போதியளவு விளம்பரம் செய்திருந்தால் இன்னும் அதிகமானவர்கள் படித்துப் பயன் பெற்றிருப்பார்களே!

15ம் தேதி இதழில் வந்துள்ள "எம். பி.யே கண்ணுறங்கு" ஒரு சுவையான கவிதை. இசையமைத்தும் பாடலாம். எனினும் இதில் நான்காவது பந்திதான் பாடலின் தரத்தைக் குறைக்கிறது, ஓரளவு. இந்தப் பந்தியைத் தவிர்த்திருக்கலாம். இதில் யாப்பும் சரிவர அமையவில்லை. ஏனைய பந்திகளோடு நன்ருக ஒத்தும் போகவில்லை. அத்துடன் இந்தக் கவிதைக்கு இது அவசியப்படவில்லை. வலிந்து எதையோ புகுத்தியது போல சில சமயத்தில் படுகிறது. மற்றப்படி, ஏனைய பகுதிகள் யாவும் நன்று.

இவ்விதழ் தலையங்கம் நன்ருக இருக்கிறது. ஏரிக்கரை ஏடுகளை இன்னும் அதிக அளவில் தாக்க வேண்டும். Daily Newsஐ இன்னும் தமிழர்கள் பணம்கொடுத்து வாங்குவது எத்தனை வெட்கக்கேடு! இது பற்றி எழுதுங்கள்.

வாழ்க 'விடுதலை'
அடைவோம் விடுதலை!

அன்புள்ள
தமிழ்ச்செல்வன்

கொக்குவில்.
17–11–70

## தள(ர்)பதியாரே, வங்காலை மக்களுக்கு கூறும் பதில் என்ன?

### கனவு கண்டது அமிர்தலிங்கமா? அல்லது நவரத்தினமா?

அடுக்கு மொழிகளை அள்ளிவீசி தமிழ் மக்களிடையே தங்கள் செல்வாக்கை பலப்படுத்திய தலைவர்கள் யாவர்? நேர்மையைக் கடைப்பிடித்து உண்மையை எடுத்துரைத்த இலட்சியத் தலைவன் யார்? என்பதனை இன்னும் சில வருடங்களில் தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ளப் போகின்றுர்கள்.

தமிழ் மக்கள் தன்மானத்துடனும் உரிமையுடனும் வாழ முடியாமல் அடிமை வாழ்வு வாழ்வதற்கும், சிங்கள இராணுவத்தினரின் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு இரத்தம் சிந்துவதற்கும் அடையாள அட்டை மசோதா வழி வகுக்கும். அடையாள அட்டை சிங்கள தமிழ் மக்களுக்கு பொதுவானது என்று கூறப்பட்டாலும் அது நடைமுறைக்கு வருகின்றபோது கள்ளக் குடியேற்றக்காரனுக சந்தேகப்படும் தமிழனுக்கு ஆபத்து இருக்கின்றதே தவிர சிங்களவருக்கு அதில் எந்த விதமான ஆபத்தும் இல்லை. கள்ளக்குடியேற்றக்காரனு என்று ஆராய்வதற்கு சுப்பையாவையும், கந்தையாவையும்தான் விசாரிப்பார்களே தவிர சிறிசேனுவையோ அப்புகாமியையோ விசாரிக்க மாட்டார்கள் என தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. நவரத்தினம் அவர்கள் 23–9–70ல் புளியங்கூடலில் நடைபெற்ற விவாதத்தின் போது அடையாள அட்டை மசோதாவினுல் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போகும் தீங்குகளை தீர்க்க தரிசனத்துடன் எடுத்துரைத்தார்.

ஆனுல் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் தள(ர்)பதி அமிர்தலிங்கம் அவர்கள் ஈழத் தமிழ் மக்களுக்கு அடையாளஅட்டைமசோதாவினுல் எந்த விதமான ஆபத்தும் இல்லை. தமிழ் மக்களைக் காப்பாற்ற புறப்பட்ட நாம் கடைசிவரை எங்கள் நோக்கத்தில் இருந்து மாற மாட்டோம். ஆனபடியினுல் தமிழ் மக்கள் இந்த மசோதாவை யிட்டு பயப்படத்தேவையில்லை.

"குழந்தைகள் நித்திரையில் கனவு கண்டு திடுக்கிடுவதைப் போல் எதிர்காலத்தைப்பற்றி திரு. நவரத்தினம் அவர்கள் பயங்கரக் கனவு காண்கிறுர்" என வாய் கூசாமல் உண்மையை மறைத்து (பதவிக்காக) பொய்யை உரைத்தார் திரு அமிர்தலிங்கம்.

உண்மைக்கும் நேர்மைக்கும் என்றும் அழிவில்லை என்பதனை வங்காலைத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல் நிரூபிக்கின்றது.

வங்காலை கிராமத்தைச் சேர்ந்த 35மீனவர்கள் சனிக்கிழமை இராணுவ வீரர்கள் எழுவரின் பயங்கரத்தாக்குதலுக்கு இலக்காகினராம். மீனவர் அடையாள அட்டை இல்லை! என்ற காரணத்திற்காக கடலில் வைத்து இரணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட இந்த மீனவர்களுக்கு சவுத்பார் கடற்கரைஇராணுவச் சாவடியில் வைத்து இராணுவவீரர்கள் சொல்லொணு இம்சை இழைத்தனராம்.

'துப்பாக்கி முனையில் எங்களை இராணுவவீரர்கள் சாவடிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்கள் எங்களை தாக்கினர். பின்னர் கடற்கரையில் வளர்ந்துள்ள முள்ளிச் செடிகளில் படுக்கவைத்து பூட்ஸ் கால்களால் உதைத்தனர். தாக்குதலின் போது இரண்டொரு மீனவர்களின் நாசியிலிருந்து இரத்தமும், வழிந்தது. இந்த அட்டகாசம் சுமார் இரண்டு மணி நேரம் வரை நீடித்தது' என மீனவர்கள் கூறினர். இதன் பின்னர் மீனவர்கள் மன்னுர் பொலிசார் வசம் இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டனர் (மித்திரன் 8-12-70)

அடையாள அட்டை மசோதா சட்டத்தினுல் ஏற்படப் போகின்ற விளைவுகளைத் தமிழினம் நேரிலே கண்டு உணர்ந்து, அனுபவித்துப் புரிந்துகொள்ளும் என அன்று நவம் கூறியது எவ்வளவு உண்மை என்பதனை தமிழ் இனம் இன்றுதான் உணர்கிறது.

அன்ருடம் உழைத்து உண வருந்தும் குடும்பத்தின் தலைவன் பொலீஸ் நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்தால் அக்குடும்பத்தின் நிலை என்ன? குடும்பத்தில் பட்டினி-வாழ்க்கையில் வெறுப்பு இறுதியில் குடும்பமே தற்கொலை! இந்த நிலை மற்றைய தமிழ்க் குடும்பங்களுக்கும் ஏற்பட்டு தமிழ் இனம் அழிந்து போகவிடுவதா? அன்றேல் எமக்கொரு நாடு பெற்று தமிழ் இனத்தின் அழிவுப்பாதையைத் தடுத்து நிறுத்தவேண்டுமா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் தமிழ் மக்கள்.

எதிர்காலத்தைப்பற்றி பயங்கர கனவு கண்டது அமிர்தலிங்கமா? அன்றேல் காவலூர் நவரத்தினமா? என்பதை இந்த நிகழ்ச்சி நிச்சயமாக தமிழ் மக்களுக்கு உணர்த்தி வைக்கும். தமிழ் மக்கள் இன்று உண்மையை உணர்ந்து என்ன பலன்? அன்றே 68ம் ஆண்டே (தமிழரசுக் கட்சியினர் அடையாள அட்டை மசோதாவை ஆதரித்ததின் மூலம்) தமிழர் கையில் அடிமை விலங்கு பூட்டப்பட்டு விட்டதே!

இலட்சியத் தலைவர் காவலூர் நவம் தலைமையில் அணிதிரண்டு அடிமைத்தளையை உடைத்தெறிந்து நமக்கொரு நாடு பெற்றிட ஒன்று கூடிடுவோம்; அதில் வெற்றியும் பெற்றிடுவோம்.

க. ஜெயபாலன்

## தமிழ் அமைச்சரால் முடியாததை தமிழ் எழுதுவினைஞர் சாதித்தனர்!

### எழுதுவினைஞர் சங்கத்தின் பாராட்டத்தக்க பணி!!

முந்நாள் பிரித்தானிய தளங்களில் வேலை செய்து தற்சமயம் அரசசேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் அனைவரையும் மொழி சம்பந்தமாக "பழைய" ஊழியர்களாகக் கருத அமைச்சரவை ஒப்புக்கொண்டுள்ளது.

இக் கோரிக்கையை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் முன்வைத்து விடாப்பிடியாக ஆண்டு பலவாக வற்புறுத்தி வந்துள்ளது. மகஜர்கள் மூலமும், நேரடிப் பேட்டிகள் மூலமும் தமது கோரிக்கையை சங்கத்தினர் வலியுறுத்தி வந்தனர். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது அரசாங்கம் இதை ஏற்றுக் கொண்டுள்ளது.

இதே கோரிக்கையை அரசாங்க எழுது வினைஞர் சங்கம் தமிழரசுக்கட்சி 'தேசிய' அரசில் உறவு பூண்டிருந்த வேளை அக்கட்சி மூலமும் முன்நாள் தமிழ் அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் மூலமும் பெற்றெடுக்க எவ்வளவோ முயற்சித்தும் முடியவில்லை.

ஆட்சி செலுத்திய அரசியல் கட்சியினுல் பெற்றுக் கொடுக்க முடியாத ஒரு கோரிக்கையை–தமிழ் எழுதுவினைஞர்களின் தொழிற் சங்கம் அரசியல் ஆதரவின்றி வெற்றிபெற்றுள்ளது. நியாயமான கோரிக்கைகளுக்காக விட்டுக்கொடுக்காமல் போராடினுல் அரசாங்கம் நெடுகிலும் தட்டிக்கழிக்க நியாயமில்லை என்பதற்கு எழுது வினைஞர் சங்கத்தின் வெற்றி ஒரு சான்று.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழ் படங்கள்...

ளது. இடையில் சிங்களப் படங்களை டப் செய்ய தற்போது சில பேர்வளிகள் முன்வந்துள்ளனர். தரமான சிங்களப்படத்திலிருந்து டப்செய்யப்பட்ட தமிழ் படங்களிருக்க இனி தமிழ்ப்படங்களை இறக்குமதி செய்யப்படவேண்டிய அவசியமில்லையென இலங்கை அரசு தமிழ்ப்படங்களுக்கு முழுத்தடை உத்தரவு கொண்டுவரும். இதற்கு தமிழர் சிலரே உடந்தையாகினும் ஆச்சரியப்படுவதற்கில்லை. முடிவில் இலங்கையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் தமிழ்ப்படங்களே பார்க்க முடியாத நிலைக்குத் திட்டமிட்டாற்போல யாவும் அமைந்து வருகின்றன."

கேட்டுநான் இன்ப ஊற்றுக் கேணியிற் குளிப்ப தென்னுள் "

விடுதலை

முரசு : 5 | 1-1-71 | முழக்கம் 74

''என்று தணியும் இந்த சுதந்திரதாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்''

## தாமதம் ஏன்?

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் (ஈழத்தில்) சிங்களம் நீதிமன்றங்களில் புகுத்தப்பட்டால் அங்கு ''புரட்சி'' ஏற்படுமென தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எச்சரித்திருக்கிறார்.

ஈழத்திலுள்ள நீதி மன்றங்களில் சிங்களம் புகுத்தப்படும் பாதகமான கொள்கையின் தன்மையை விளக்கவே அதை எதிர்த்து தமது கட்சி நடத்தக்கூடிய எதிர்ப்பை ''புரட்சி'' என திரு. செல்வநாயகம் வர்ணித்துள்ளார்.

ஈழத்தின் நீதிமன்றங்களில் சிங்களம் புகுத்தப்படுவதை நாமும் எதிர்க்கிறோம். இதை எதிர்த்து தாம் எடுக்க விருக்கும் நடவடிக்கையை திரு. செல்வநாயகம் ''புரட்சி'' என வர்ணித்திருப்பினும் அப்''புரட்சி'' அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கையாகவே இருக்குமென நம்புகிறோம். ''புரட்சி'' என்றோ ''போராட்டம்'' என்றோ பெயரிடப்பட்டாலும் உண்மையில் திரு. செல்வநாயகம் கூறுவது எதிர்ப்பு நடவடிக்கையையே தான். எதிர்ப்பியக்கத்தின் வலிவையும்—உறுதியையும்—தீரத்தையும் நோக்கி அது ஈற்றில் ''புரட்சி''யாக மாறினாலும் கூட நாம் மனதார வரவேற்போம்.

ஆனால் இவ்வித எதிர்ப்பு நடவடிக்கையை நீதிமன்றங்களில் சிங்களம் புகுத்தப்படும்வரை காலந்தாழ்த்த வேண்டியுள்ள காரணங்கள் தான் நமக்கு புலனாகவில்லை.

சிங்களம் ஈழத்தை ஆக்கிரமிக்க ஆரம்பித்து வெகு நாட்களாகி விட்டன. தமிழரசுக் கட்சியும் சேர்ந்து உருவாக்கிய கொள்கைகளின் அடிப்படையில் சிங்களம் ஈழத்தின் சிறு சிறு கிராமங்களுக்குள் கூட ஊடுருவி விட்டது! கிராமசேவகர்களும் சிங்களம் படிக்க வேண்டுமென்று தமிழரசுக்கட்சி அமைச்சரை உள்ளடக்கிய அமைச்சரவை செய்த முடிவைத்தான் குறிப்பிடுகிறோம்.

தமிழ்மொழி விசேட விதிகள் செல்லாக்காசாகி விட்டன. இப்பொழுது சிங்களம் மட்டுமே ஈழத்தில் அரசோச்சுகிறது. இதை நாம் சொன்னால் பொய்ப்பிரசாரம் எனக்கூறுவர். ஆகவே எமது கூற்றை உறுதிப்படுத்த தமிழரசுக் கட்சியினரின் பிரசார ஏடான ''சுதந்திரன்'' இதழ்களைப் பார்க்கும்படி மட்டும் சொல்லிவைக்கிறோம்.

இதை விட தமிழ்மொழி விசேட விதிகளை ரத்துசெய்வோம் என்ற தேர்தல் விஞ்ஞாபனத்துடன் வந்த முக்கூட்டு முன்னணியின் முக்கிய அமைச்சரான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆங்கிலம் தெரிந்தவர்களால் தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு தாம் தமிழில் மறுமொழி (மொழி பெயர்ப்பு) அனுப்பப் போவதில்லையென பாராளுமன்றத்திலேயே கூறியும், அண்மையில் நடந்தேறிய அரசாங்க அதிபர் மாநாட்டில், சகல பதிவேடுகளும் சிங்களத்தில் மட்டுமே வைக்கப் படுமென முடிவுசெய்தும் தமிழரசுக் கட்சியினருக்குச் சவால் விடுத்திருக்கிறார்.

மொத்தத்தில் இன்று நாட்டு நிர்வாக மொழி தனிச் சிங்களம். அரசாங்க சேவையில் தமிழர்களுக்கு இடமில்லை! தனியார்துறை (சிங்கள) தேசிய மயமாக்கப்பட்டு அங்கும் தமிழருக்கு இடமில்லாத நிலை உருவாகப்போகிறது. பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவருக்கு இடமில்லை! தமிழ் பகுதிகள் சிங்களக் குடியேற்றத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்றன! தமிழ் குழந்தைகளுக்குச் சிங்களம் படிப்பிக்கப்பட்டு வருவதுடன் இனி சகல தமிழ் பள்ளிக்கூடங்களிலும் சிங்களத்தை ஒரு கட்டாய பாடமாக்க ஆட்சியாளர் நடவடிக்கை எடுக்கின்றனர்!

தமிழ் மக்களுக்கு இன்று எந்த ஒரு உரிமையும் இல்லை. நாளும் பொழுதும் நமது உரிமைகள் பறிக்கப்படுகின்றன. கடைசிச்சுருக்காக அமையப்போகிறது இலங்கையை குடியரசாக ஆக்கும் அரசியல் நிர்ணயசபைத் தீர்மானம். நிலைமை இவ்வளவு மோசமாகிய பின்னரும் திரு. செல்வநாயகம் ஈழ நீதி மன்றங்களில் சிங்களம் புகுத்தப்பட்ட பின்னர்தான் ''புரட்சி'' ஏற்படும் என்று எச்சரிப்பதில் எவ்வித பொருளும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுகிறோம். என்று கூறிக்கொண்டு ஆட்சியாளரின் திட்டங்களை பாராளுமன்றத்தில் எதிர்க்காமல் மதில்மேல் பூனையாக இருந்துவிட்டு நீதிமன்றங்களில் சிங்களம் வந்தால் ''புரட்சி'' ஏற்படும் என்று கூறினால் வழக்குரைஞர்களின் கட்சி சொந்த நன்மைக்காகக் கூக்குரலிடுகிறது என்ற குற்றச்சாட்டை மறுக்க முடியாதுபோய்விடும். அத்துடன் அரசியல் நேர்மையையும் இது பிரதிபலிக்காது.

ஆகவே எதிர்ப்பு இயக்கம் தேவை! அதுவும் உடனடியாகத்தேவை!! நீதி மன்றங்களில் சிங்களம் வரும் வரை 'புரட்சி' பார்த்துக் கொண்டுடிருக்கத் தேவையில்லை.

எனவே தமிழரசுக் கட்சியினர் தயக்கத்தைக் கைவிட்டு உடனடியாக சிங்கள ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கத்தை தமிழ் மக்களிடையே கட்டி வளர்க்க வேண்டும். அதற்கு வழிகாட்ட முதற்படியாக அவர்கள் அரசாங்கத்தின் திட்டங்களை பாராளுமன்றத்தில் நேர்மையாக எதிர்க்க முன் வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

(5ம் கலத் தொடர்ச்சி)

தோஷங்களில் ஒன்றேயன்றி அந்த வியாதியே அல்ல. நாம் ஆளப்படுவோர் என்பதே அந்த வியாதி. அந்த வியாதிக்குத்தான் மருந்து தேவை. நமக்கொரு நாடு என்று ஒன்றை நிறுவி அந்த நமது நாட்டில் நமது சுயாட்சியை அமைத்தாலன்றி அந்த வியாதி நீங்காது. எமது இனம் வாழ முடியாது. நமது குழந்தைகளுக்கு எதிர்காலம் இல்லை. இந்த உண்மையை எவ்வளவுவிரைவில் உணர்ந்து செயல் படுகிறோமோ அதிலே தான் தங்கியுள்ளது நமது குழந்தைகளின் சுபிட்சமான வாழ்வு.

பல்கலைகழக......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டுவந்து இந்த மோசடியை அம்பலப் படுத்துவது அதன் கடமை இந்தப் பிரேரணையை ஏனையதமிழ், முஸ்லிம் பா. உ.கள் ஆதரிக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். இதனைத் தமிழரசுக் கட்சி செய்ய முன்வருமா?

இப்படி மாணவ வட்டாரத்தினர் சிலர் நமது நிருபரிடம் கருத்துத்தெரிவித்தனர்.

### சபாஷ் மாணவர்களே!

யாழ்ப்பாணம் 24-11-70 செவ்வாய்க்கிழமையன்று தமிழ் மாணவ சமுதாயத்தின் எழுச்சியைக் கண்டு பிரமித்தது. குடாநாட்டின் முக்கிய மகாவித்தியாலயங்களின் உயர்வகுப்புக் குழந்தைகள் ஐயாயிரத்துக்கு மேலானோர் கொக்குவில் சந்தியில் ஒன்று கூடி யாழ்ப்பாண மாநகர வீதிகளிலே பவனி வந்து, கோட்டை மைதானத்திலே திரண்டு கூட்டம் நடத்தினர். ஊர்வலம் பிரதான வீதி வழியாகச் செல்லும் பொழுது ஒரு மைலுக்குமேல் நீளம் உள்ளதாக இருந்தது. பொலீஸார்கூட மெச்சும் அளவுக்கு ஒழுங்காகவும் கட்டுப்பாட்டுடனும் மாணவர்கள் நடந்து கொண்டார்கள். மாணவர்களும் அவர்கள் தலைவர்களும் அனேகமாக எல்லோரும் 12 தொடக்கம் 17 வயசுக்கு உட்பட்டவர்கள் — எவ்வளவு பொறுப்பு உணர்ச்சியோடு நடந்து கொண்டார்கள் என்பதை நினைக்கும் பொழுது, இலங்கையின் இதர பாகங்களிலே நடப்பனவற்றோடு ஒத்துப் பார்க்கும் பொழுது, தமிழ் இனம் பெருமைப்படாமல் இருக்க முடியாது. அப்படியிருந்தும், தமிழரினால் நடத்தப்படும் பத்திரிகைகள் கூட இதற்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழ் குழந்தைகளுக்குக் கைகொடுத்து உதவவில்லை. அரசாங்கத்துக்குக் காக்காய் பிடிக்கும் ஆர்வம் அப்படி இருக்கிறது. கலாட்டா நடந்தால்தான் பத்திரிகைகளுக்குப் புதினம் போலும்.

இதில் இன்னுமொரு விந்தை என்னவென்றால், பெற்றோர்களின் நடத்தை. அதிகாலையிலே வீட்டிலிருந்து புறப்பட்ட தமது குழந்தைகள், மத்தியானச் சாப்பாட்டுக்கும் வீடு திரும்பாமல், இரவு வரை அன்னம் தண்ணீர் இல்லாமல், பத்து மைலுக்கு மேல் ஊர்வலத்திலே நடந்து, கோட்டை மைதானத்திலே கூடுகிறார்களே, எதற்காக இப்படிக் கூடுகிறார்கள் என்று பார்ப்பதற்கோ அல்லது என்ன பேசுகிறார்கள் என்று கேட்பதற்கோ பெற்றோர் வந்து கூடவில்லை. 5000 குழந்தைகள் கூடிய இடத்திலே குறைந்த பட்சம் 5000 பெற்றோரையாவது எதிர்பார்ப்பது இயற்கை. தாம் பெற்றெடுத்த குழந்தைகள் தங்கள் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்துக் கண்ணீர் வடிக்கும் இடத்திலே தாமும் திரண்டு ஊக்கத்தையும் ஆத்மபலத்தையுமாவது அளிக்க முடியாதா?

நாகரீகம் படைத்த மக்கள் வாழும் எந்த நாட்டிலும் இல்லாதவகையில் இலங்கை அரசாங்கம் கொடுங்கோன்மை நடத்திவருகிறது. இரவு பகல்பாராமல் விழுந்து விழுந்து படித்து, பணத்தை அள்ளி இறைத்துப் பிறைவேற் டியூஷன் எடுத்துக் கஷ்டப்பட்டு சர்வகலாசாலை புகுமுகப்பரீட்சையிலே முதல் தரமாகத் திறமையுடன் சித்தியடைந்தாலும் நமது குழந்தைகள், தமிழராகப் பிறந்து செய்த ஒரே பாவத்துக்காக இலங்கைச் சர்வகலாசாலைகளிலே சேர முடியாத நிலைமை உருவாகி இருக்கிறது. அண்மையிலே நடந்த விஷயம் என்ன? சென்ற பரீட்சையின் பலனாகப் பேராதெனியப் பல்கலைக் கழகத்தின் பொறியியற் பகுதியில் சேர்வதற்கு 156 குழந்தைகள் தெரிந்தெடுக்கப்பட்டனர். சோதனையிலே அதிகப்படி புள்ளிகள் பெற்ற திறமையின் அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் வந்ததே

## அரசியல் அங்காடி

''நவமணி''

மோசம். 156 பேரில், 117 பேர் தமிழ் குழந்தைகள்! என்ன அக்கிரமம் என்று எழுந்தார்கள் சோதனையில் ஃபெயில்விட்ட சிங்கள மாணவர்கள், எங்கள் பகுதியில் கட்டியிருக்கும் பேராதனை சர்வகலாசாலையிலே, அதுவும் எங்கள் மக்கள் அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் நேரத்திலே, எங்களுக்கு இடம் இல்லாமல் தமிழரை இங்கே வரவிடுவதா? எனவே தமிழ் சோதனைகாரர் தமிழருக்குச் சலுகை செய்துவிட்டனர் என்று குற்றம் சாட்டி சோதனையை ரத்துச் செய்யும்படி கோஷம் எழுப்பினார்கள். அரசாங்கம் சிங்களக் கல்விமான்களைக் கொண்ட ஒரு கமிற்றியை நியமித்து மாணவர்களின் பரீட்சை விடைத்தாள்களை மறுபரிசீலனை செய்யும்படி ஆணையிட்டது. மறுபரிசீலனை செய்த கமிற்றி, எவ்வித பாரபட்சமோ பிழைகளோ நடக்கவில்லை, எல்லாம் நேர்மையாகவே நடக்கிறது, என்று அறிக்கை சமர்ப்பித்து. அதைப் பார்த்த அரசாங்கம் சோர்வடையவில்லை. ''தரப்படுத்தல்'' என்னும் அபூர்வ மந்திரச் சொல் ஒன்றைக் கண்டுபிடித்து அதன்படி ஃபெயில் விட்ட சிங்கள மாணவர் மத்தியிலிருந்து 100 மாணவர்களைத் தெரிந்து எடுத்து பேராதனைச் சர்வகலாசாலையில் சேர்க்கும்படி கல்வி அமைச்சருக்குக் கட்டளையிட்டது. ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 156 பேருடன் இன்னும் 100 மாணவர்களைச் சேர்ப்பதானால் சர்வகலாசாலையில் இடவசதி வேண்டுமே. ''ஊருக்கு எழியவன் பிள்ளையார் கோவிலாண்டி'' என்ற முதுமொழிப் படியும், தட்டிக் கேட்க ஆளில்லாதவன் தமிழன் தானே என்ற துணிச்சலிலும், பேராதனைச் சர்வகலாசாலைக்கு என்று தெரிவு செய்யப்பட்ட 117 தமிழ் மாணவரில் 56 பேரைத் தரத்திலே குறைந்த கட்டுபெத்தை தொழில் நுட்பக் கல்லூரிக்கு அனுப்பினார்கள். இந்த அநீதியைச் செய்தவர்கள் அரசாங்மேயன்றி, அவர்களின் தீர்மானத்தை நிறைவேற்றிய கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹமூது மாத்தரம் என்று சொல்ல முடியாது. ஆனால் கல்வி அமைச்சர் செய்தது என்னவென்றால், ''SAUCE FOR THE GOOSE IS SAUCE FOR THE GANDER'' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதாவது வாத்துப் பெடை உண்ணும் உணவை வாத்துச் சேவலும் உண்ணலாம்தானே என்பது. அந்தச் சித்தாந்தத்தைக் கடைபிடித்தார் கல்வி அமைச்சர். பரீட்சையிலே ஃபெயில் பண்ணின சிங்கள மாணவருக்கு ''தரப்படுத்தல்'' முறை பொருந்துமானால் அதேமாதிரி ஃபெயில் விட்ட முஸ்லீம் மாணவருக்கு ஏன் பொருந்தாது? எனவே அதன்படி 22 முஸ்லீம் மாணவரை பேராதனைக்கும் 15 மாணவரைக்கட்டுபெத்தைக்கும் எடுத்து அனுப்பினார். இந்த முறை இந்த நடவடிக்கையை எதிர்த்துக் கட்டுபெத்தைச் சிங்கள மாணவர் கலாட்டாச் செய்தார்கள். SAUCE FOR THE GOOSE IS SAUCE FOR THE GANDER என்பது ஆங்கில ஆட்சியிலேயன்றி சிங்கள ஆட்சியிலே இல்லை என்பது அடிப்படைப் பொருள்.

இந்தச் சம்பவம், அதாவது மனிதாபிமானமற்ற கொடிய அநீதி, இன்னும் பள்ளிக்கூடங்களிலே படித்துக் கொண்டிருக்கும் தமிழ் மாணவர்கள் மனதிலே பீதியை உண்டாக்கியுள்ளது. பாடுபட்டுப் படித்துப் பரீட்சையிலே சித்தியடைந்தும் பிரயோசனம் என்ன? திறமைக்கு இடந்தருவார்களா? உயர்நிலைக் கல்விக் கழகங்களிலே இனித் தமிழ் மாணவர்களுக்கு இடமில்லையா? இன்னோரன்ன கேள்விகளால் ஊசலாடும் மனத்தராகிய 5000 மாணவர்கள்தான் ஊர்வலம் நடத்தி அநீதிக்கு எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். நேர்மையுள்ள அரசாங்கமானால் நேர்மையாகப் பதில் சொல்ல வேண்டியது அவர்கள் கடமை. ஆனால் என்ன சொன்னார்கள்?

ஒரு ஊரிலே ஒரு குடியானவனும் மனைவியும் இருந்தார்கள். இருவருக்கும் காது கேளாது. அவர்களுக்கு ஒரேயொரு மகள், அவளும் செவிடு. ஒரு நாள் வயலிலே வேலை செய்து கொண்டிருந்த பெற்றோருக்குக் கஞ்சிப்பானை எடுத்துக் கொண்டு போனாள் மகள். வழிநெடுகத் தனது கல்யாணத்தைப்பற்றிச் சிந்தித்தவாறே நடந்தாள். வழியிலே களவுபோன தனதுமாடுகளைத் தேடிக்கொண்டு வந்த விவசாயி ஒருவன் எதிர்ப்பட்டான். பெண்ணைப் பார்த்து ''இந்த வழியிலே ஒரணைமாடு போனதாகக் கண்டாயா''? என்று கேட்டான். தனது கல்யாணத்தைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்த அந்தச் செவிட்டுப் பெண் ''அதுக்கென்ன, அப்புவுக்கும் ஆச்சிக்கும் விருப்பமென்றால் நானென்னமாட்டேன் என்றா சொல்லுகிறேன்?'' என்றாளாம். அதுபோலத்தான் இருக்கிறது உதவிக் கல்வி அமைச்சர் துடாவையின் கதை. தமிழ் மாணவர்கள் தமது உயர் கல்வி வாய்ப்பைப் பற்றியும் எதிர்கால வாழ்க்கையைப் பற்றியும் கவலை கொண்டு ஊர்வல[ம்] நடத்திக் கூட்டம் கூடி ... கேள்விகளைக் கேட்டார்க[ள்] ... தமிழ்ப் பகுதிப் பாடசாலை[க]ளுக்கு எப்படிச் சிங்கள ஆ[சி]ரியர்களை அனுப்பிச் சிங்கள[த்]தைப் புகுத்தலாம் என்று சதா சிந்தித்துக்கொண்டிருந்த உதவி அமைச்சர் துடாவை உடனே பட் என்று பதில் அளித்தார் பாராளுமன்றத்திலே ''தமிழ் பெற்றோர்கள் பலர் சிங்கள ஆசிரியர்களை நியமிக்குமாறு கேட்கிறார்கள். நாங்கள் கட்டாயம் அனுப்பியே தீருவோம். ஊர்வலம் நடத்தி ஆர்ப்பாட்டம் செய்து எங்களைப் பயமுறுத்த முடியாது. பூச்சாண்டி காட்டி இந்த அரசாங்கத்தைப் பயமுறுத்தலாம் என்று தமிழ் மாணவர் நினைத்துவிடக் கூடாது என்றார். இந்தப் பதிலுக்கும் அந்தச் செவிட்டுக் கதைக்கும் என்ன வித்தியாசம்?

கட்டுபெத்தைக்கு அனுப்பப்பட்ட 56 மாணவர்களின் பெற்றோர் அரசாங்கத்துக்கு எதிராக வழக்குத் தொடரப் போகிறார்கள் என்று அறிகிறேன். இது வரவேற்கப்பட வேண்டிய விஷயம். 'விடுதலை' இயன்ற ஊக்கத்தையும் கொடுக்கும் என்று நினைக்கிறேன். அரசியல் வழக்குகள் இனத்துக்கு உருப்படியான பலன் எதையும் ஈட்டிக் கொடுக்க முடியாது என்பது உண்மை. இருந்தபோதிலும், அரசாங்கத்தின் இனப் பாகுபாட்டு வெறியையும், அநீதிகளையும், சோஷலிஸ்ட் வாதிகள் என்று சொல்லித் திரிபவர்களின் கபட நாடகங்களையும் அம்பலப் படுத்தி, பசுத்தோலைக் கிழித்து உள்ளேயிருக்கும் புலியினை வெளிக்காட்டவாவது உதவும். ஒருவேளை சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு நீதிமன்றங்களாவது நீதி வழங்கலாமல்லவா?

மாணவர்களின் பிரச்சினை தமிழினத்தைப் பீடித்திருக்கும் வியாதியின் வெளிக் குண

(முதலாம் கலம் பார்க்கவும்)

இப்பத்திரிகை 10, பென்றீவ் தோட்டம், கொழும்பு 3ல் வசிக்கும் க.கு. ஆடியபாதன் அவர்களால், விடுதலை அச்சுச் சாதனங்களுடன் கொழும்பு-13 விவேகானந்தர் மேட்டிலுள்ள இரஞ்சனா அச்சகத்தில் 1, ஜனவரி 1971 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.